# இந்து ஆலயங்களும் தமிழர் சேமிப்பும்

உ.அமிர்தா மற்றும் செ.சந்திரசேகரம்

பொருளியல்துறை,கலைப்பீடம்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**ஆய்வுச்சுருக்கம்**

பொருளாதாரச் செயற்பாடுகளில் சேமிப்பு என்பது பிரதானமானதாக காணப்படுகின்றது. இத்தகைய சேமிப்புக்களை நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்தக் கூடிய மூலங்களில் முதலீடு செய்து வினைத்திறனான அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டும். அந்தவகையில் இவ்வாய்வானது ‘‘இந்து ஆலயங்களும் தமிழர் சேமிப்பும் ’’எனும் தலைப்பில் இடம்பெறுகின்றது. இவ்வாய்வின் நோக்கமாக ஆய்வுப் பிரதேசத்தில் இருக்கின்ற ஆலயங்களில் காணப்படும் சேமிப்பினை கண்டறிந்து அதனை பிரதேச சமூக பொருளாதார அபிவிருத்திக்கு பயன்படுத்தல் என்பது காணப்படுகின்றது .இவ்வாய்விற்காக ஆலயங்களின் வருமானம் மற்றும் சேமிப்பு , செலவுகள் தொடர்பான முதலாம், இரண்டாம் நிலைத் தரவுகளைப் பெறுதல், கிராம மக்கள் மற்றும் சமூகசேவையாளர்கள் உடனான கலந்துரையாடல், நேரடி அவதானம் மேற்கொள்ளல் மற்றும் படையாக்கப்பட்ட மாதிரி எடுப்பு முறை மூலம் 15 குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு குழுக்கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட்டதுடன் 15 தெரிவு செய்யப்பட்ட ஆலயங்களுக்கு வினாக்கொத்தும் வழங்கப்பட்டது. இவ்வாறாக பெறப்பட்ட தரவுகள் பகுப்பாய்விற்காக கணிதவியல் நுட்பம், சமூகவிஞ்ஞான புள்ளிவிபரவியல், சாதாரண புள்ளிவிபரவியல் நுட்பம் பயன்படுத்தப்பட்டு அதனடிப்படையில் தரவுகள் தொகுக்கப்பட்டு விபரணப்புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு முறையினூடாக முடிவுகள் பெறப்பட்டன. இவ்வாறான நுட்பங்கள் ஊடாக இணுவில் பிரதேச ஆலயங்களில் காணப்படும் சேமிப்புக்களை வெளிக்கொணர்ந்து அவற்றை எவ்வாறான துறைகளில் முதலீடு செய்வது என்பதை இனங்கண்டு அதனை அபிவிருத்தி நோக்கில் பயன்படுத்தக் கூடிய வகையில் அபிவிருத்திப் பரிந்துரைகள் மற்றும் உபாயங்களை முன்மொழிவதன் மூலம் இணுவில் பிரதேசத்தில் நிலைத்துநிற்கும் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும் என்பதை எடுத்து விளக்குகின்றது.

**திறவுச்சொற்கள்:** சேமிப்பு, பொருளாதார அபிவிருத்தி, முதலீடு